**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 66 / 2024**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW4 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Karthick |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 31st day of July, 2026.

**( Accused is present )**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 12.57 மணி

நான் தற்போது புன்னப்பாக்கத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 28-12-2018 அன்று வெங்கல் பஜாருக்கு நானும் குமரவேல் என்பவரும் சொந்தவேலையாக சென்றோம். அங்கு வெங்கல் போலீசார் நின்று கொண்டிருந்தார்கள். என்னிடம் டிரைவிங் லைசன்ஸ் கேட்டார்கள். முகவரி

மற்றும் பெயர் கேட்டுக்கொண்டு காவல் நிலையம் வந்து கையொப்பம் செய்ய கேட்டுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள என்னுடைய கையொப்பம் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக உள்ள என்னுடைய கையொப்பம் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

23–12–2018 அன்று மாலை 6.00 மணிக்கு நானும், குமரவேல் என்பவரும் புன்னப்பாக்கத்திலிருந்து வெங்கலுக்கு வந்துகொண்டிருந்தபோது ஊத்துக்கோட்டை டிஎஸ்பி அவர்கள் ஈக்காடு பி.டி.ஓ. அலுவலகம் முன்பு ஒருநபரை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்தார் என்றும், என்னையும் என் நண்பர் குமரவேல் என்பவரையும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திற்கு சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டதாகவும் அதன்படி எதிரி குற்றத்தைக் கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதன் அடிப்படையில் எங்கள் முன்னிலையில் ஜியோ செல்போனை கைப்பற்றினார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 66 / 2024**

| Deposition of Witness for | Prosecution PW5<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Kumaravel |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 31st day of July, 2026.

**( Accused is present )**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**<u>முதல் விசாரணை :</u>**

நேரம் 13.06 மணி

நான் தற்போது புன்னப்பாக்கத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நானும் என் நண்பர் கார்த்திக் என்பவரும் வெங்கல் பஜார் சென்றிருந்தோம்.

அங்கு வெங்கல் போலீசார் நின்று கொண்டிருந்தார்கள். காவல் நிலையம் கையொப்பம் செய்ய கேட்டுக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாவதாக உள்ள என்னுடைய கையொப்பம் **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜரில் இரண்டாவதாக உள்ள என்னுடைய கையொப்பம் **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

23–12–2018 அன்று மாலை 6.00 மணிக்கு நானும், கார்த்திக் என்பவரும் புன்னப்பாக்கத்திலிருந்து வெங்கலுக்கு வந்து கொண்டிருந்தபோது ஊத்துக்கோட்டை டிஎஸ்பி அவர்கள் ஈக்காடு பி.டி.ஓ. அலுவலகம் முன்பு ஒருநபரை பிடித்து விசாரித்துக் கொண்டிருந்தார் என்றும், என்னையும் என் நண்பர் குமரவேல் என்பவரையும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திற்கு சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டதாகவும் அதன்படி எதிரி குற்றத்தைக் கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதன் அடிப்படையில் எங்கள் முன்னிலையில் ஜியோ செல்போனை கைப்பற்றினார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.